


# வற்றாப்பளை கண்ணகியம்மன்
# வரலாறும் திருப்பொன்னூஞ்சல் பாடலும்

செலான் வங்கியின் அன்பளிப்பு

தலச் சிறப்பு வாய்ந்த வற்றாப்பளை கண்ணகியம்மன் கோவில் திருப்பணிக்கு ரூ 18 கோடி செலவு மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் திருப்பணியில் பங்கு கொள்ள விரும்பும் அம்மன் அடியார்கள் கீழ்வரும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு தமது காணிக்கைகளை செலுத்த முடியும். மேலும் வெளிநாட்டில் வதியும் அடியார்கள் இந்தக் கணக்கிலக்கத்திற்கு பணம் அனுப்பும் நடைமுறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கின்பெயர்: VATTAPALAI KANNAKY AMMAN TEMPLE BOARD OF TRUSTEE
வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபை

கணக்கு இல : 0960-35380510-001
Swift Code : SEYBLKLX

செலான் வங்கி முல்லைத்தீவு கிளை
P.W.D வீதி, முல்லைத்தீவு

தொலைபேசி : +94212290065
+94212290066
தொலைநகல் : +94212290067
மின்னஞ்சல் : mullativu.bmg@seylan.lk
mullativu.abm@seylan.lk

## வற்றாப்பளைக் கண்ணகியம்மன் ஆலயத்தின் வரலாற்றுச் சுருக்கம்

ஈழவளநாட்டின் வளம் மிகுந்த வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரத்துக்கு மேற்கே நந்திக்கடல் உண்டு. இதன் மறு கரையில் வற்றாப்பளைக் கிராமம் உள்ளது. இந்த வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையில் சில ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் மாடு மேய்க்கும் சிறுவர்க்கு காட்சி கொடுத்த காலத்தில் இருந்து இவ்வாலயத்தின் வரலாறு ஆரம்பமாகின்றது. ஒரு மூதாட்டி வடிவில் அம்மன் வந்து அமர்ந்திருந்த பட்ட வேப்பம் படவாள் பின்னர் தழைத்து மரமாக நின்ற இடமே இன் றைய ஆலயத்தின் மூலஸ்தானமாகும். ஆரம்பத்தில் காட்சி கொடுத்த அன்றைய தினத்திலேயே உப்புநீரில் விளக்கெரிய வைத்தும் தனது ஆயிரம்கண்களை காட்டியதுடன் தொடங்கிய அற்புதச் செயல்கள் இன்றும் தொடர்கி ன்றன.

ஆரம்பத்தில் கொட்டிலாக இருந்த ஆலயம் போர்த்துக்கேயரின் மத அழிப்புக்காகவும் குறிவைக்கப்பட்டது. எனினும் ஆலயத்தை அழிக்க வந்த போர்த்துக்கேய தளபதி பனிச்சை மரம் ஆடி காய்களை எறிந்ததால் நிலை குலைந்து தப்பியோடி பின்னர் வெறும் காலுடன் வந்து நேர்த்திக்கடன் செய்ததும் இவ்வாலயத்தில் நடந்தேறியது. ஆரம்பத்தில் கிராமிய வழிபாடு மட்டும் இருந்தது. பின்னர் ஆகம வழிபாடும் இடம் பெறத் தொடங்கியது.

இவ் ஆலயத்தில் நடைபெறும் மிக முக்கியமான நிகழ்வு வைகாசி விசாகப் பொங்கலாகும். தீர்த்தக்கரை எனுமிடத்தில் இந்து சமுத்திரத்தில் தீர்த்தமெடுத்து அதனை முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்தில் வைத்து முதல் ஏழு நாட்களும் உப்பு நீரில் தீபம் எரிக்கப்பட்டு எட்டாம் நாள் மடைப் பண்டம் எடுத்து வரப்பாட்டு

வற்றாப் பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் விளக்கெரிக்கப்படும். அன்று இரவு 12 மணிக்கு வளந்து நேர்தல் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஏனைய கிரியைகள் நடைபெற்று மறு நாள் காலை பொங்கல் நிறைவடையும்.

இதனை அடுத்து வருகின்ற வெள்ளிக் கிழமை பக்தஞானிப் பொங்கல் முள்ளியவளை நாவற்காடு என்னு மிடத்தில் நடைபெறும். இந்தப் பக்தஞானி என்ற அடியவர் இந்தியாவில் இருந்து வந்த அம்மன் பக்தராவார். இவரே பொங்கலுக்குரிய பல நடை முறைகளை நெறிப்படுத்தியவர் ஆவார்.

இன்றும் பல அற்புதங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ள இவ்வாலயம் இன்று 07 கிராமங்களை சேர்ந்த 31 உறுப்பினர்களைக் கொண்ட பரிபாலன சபையால் திறம்பட நிர்வகிக்கப் படுகின்றது.

## வற்றாப்பளை ஸ்ரீ கண்ணகியம்மன்
## திருப்பொன்னூஞ்சல்
### காப்பு

திருவோங்கு பொருப்பினிலே மறைவரைந்த
சிற்பரனே விநாயகரே பிரணவத்தின்
உருவோங்கு கஜமுகனே உமையாள் பெற்ற
உத்தமனே அடியாரின் இடர்தீர்ப்பானே
தருவோங்கு கனிவற்றாப் பளையமர்ந்த
தனிச்சிலம்புக் கண்ணகியின் ஊஞ்சல் பாட
கருவோங்கு மூலகண பதியேநின்றன்
கனகமணிக் கழலிணையே காப்பதாமே.

## நூல்

சோழவளக் காவிரிப்பூம் பட்டினத்தில்
தொடர்கொடையான் மாநாகர் மகளாய்த் தோன்றி
வாழுமுயர் கோவலனின் மனைவியென்னும்
வரலாறு காட்டிமா மதுரைவேந்தன்
சூழும் வினை முடித்தொருகைச் சிலம்பினோடு
துதித்திடு செங் குன்றில்வேங் கைக்கீழ் நின்றாய்
ஆழியலை பரவுவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீரூஞ்சல். 1

முன்பொலிநால் வேதங்கள் தூண்களாக
மொழிந்தசிவா கமங்களெல்லாம் நாண்களாக
பொன்பெருகு திருமுறைகள் மாடமாக

போற்றுமுப நிடதங்கள் பீடமாக
இன்பமுயர் கலைகளெல்லாம் விட்டமாக
ஏத்துபுரா ணங்கள்பரி வட்டமாக
அன்பர்பணி புரியவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீரூஞ்சல். 2

மதுரைவிட்டுச் செங்குன்றில் பதினான்காம்நாள்
வானோங்கு வேங்கைமர நிழலில் நின்று
பதியான கோவலனோ டமரர்நாடு
பயின்றதனை யறிந்தசெங்குட் டுவன்செய்வித்த
புதுக்கோயில் உறைந்தவளே இலங்கைமன்னன்
போற்றுவிழா வுக்கழைக்க வருகை தந்தாய்
அதிர்முழவு முழங்குவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீரூஞ்சல். 3

கண்டிகய பாகுவுக்காய் வஞ்சிநீங்கி
கருதியொன்பான் தலந்தங்கி உழவோர் வைத்த
பண்டுலர் வேம் பின்படவாள் மீதோர் மூத்த
பழங்கிழவி யாய்த்தோன்றிப் பால்கறக்க
அண்டிவரும் சிறுவரிடம், பசியைப் போக்க
அமுதுபொங்க லிடச்சொல்லிப் பத்தாழராய்
அண்டர்தொழ இருந்தவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீரூஞ்சல். 4

தருமநெறிச் சினத்திலெழு முகமும் கண்ணும்
சடைவிரித்த கடுநடையும் நீதிகேட்கும்
ஒரு சிலம்புத் திருக்கரமும் சிவந்த மூக்கும்
ஓது மறை வரம்புரைக்கும் பவளவாயும்

மருவழகை யுடையாளே, சாந்தரூபி
வடிவாகி அடியார்க்கு வரங்கள் நல்கி
அருளருவி நீர்வற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ணகித்தாயே ஆடீரூஞ்சல். 5

உணவுகேட் டமர்ந்தபா வாள், தளிர் காய்
உற்றிடுவேம் பெனவிளங்க, உவர்க்கடல் நீர்
மணிவிளக்குக் கெண்ணெயாய் எரியச் செய்து
வளர்கோயில் கொண்டவளே, நினது பாதம்
பணிபேணும் பேறெமக்குத் தருவாயம்மா
பனிச்சைமரத் திருவிளையா டல்களாற்றி
அணிபழன வயல்வற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ணகித்தாயே ஆடீரூஞ்சல். 6

மீனாட்சி கண்ணுதித்த சக்தியாகி
மேதினியிற் கண்ணகிப்பேர் கொண்டாயம்மா
கோனாட்சி மதுரையிலே தவறுங்காலம்
கொடியவர்க ளழிவரெனக் குறித்தவண்ணம்
வாணாட்சி புரிவோரும் ஏணையோரும்
மதித்துணரும் விளையாடல் செய்தாய், சூழும்
ஆனாட்சி பயில்வற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீருஞ்சல். 7

பூரணியே பிரம்பமைத்து துடிமுழக்கிப்
போற்றுதமிழ் அம்மானை கேட்டுவக்கும்
நாரணியே வைகாசி விசாகத்தோடு
நண்ணியபூ ரணைத்திங்கள் பொங்கல் ஏற்கும்

காரணியே தீராநோய் தீர்க்கும் செல்வக்
களஞ்சியமே செப்பேட்டுப் பத்திச்சொல்
ஆரணியே சிவவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ணகித்தாயே ஆடீரூஞ்சல். 8

புன்சிரிப்பு முகமாடச் சடைகளாட
புகழ்படைத்த சிலம்பாடக் கரங்களாட
தென்மதுரைப் பதிபயின்ற தாள்களாட
செவ்வெண்மை உடையாட, கொங்கையாட
மின்முத்துக் குடைஎருக்கு மாலையாட
விண்ணுற்ற கோவலசெஞ் சோதியாட
அன்பினிக்கும் தமிழ்வற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ணகித்தாயே ஆடீரூஞ்சல். 9

கற்பகவா ரணனுடனே முருகனாட
கயிலையா னோடுசக்தி உமையாளாட
தற்பரநா ராயணன்பூ மகளோடாட
சதுர்முகனும் கலைமகளும் ஆடவீர
நாற்புதல்வன், ஐயன் வைரவனாராட
நந்திகடல் சப்தகன்னி யார்களாட
அற்புதங்கள் மிகுவற்றாப் பளையில் மேவும்
ஆதிகண்ணை கித்தாயே ஆடீரூஞ்சல். 10

உம்பரறி யாமுதல்வி ஆடீரூஞ்சல்
உயர்தவத்தில் வருபுதல்வி ஆடீரூஞ்சல்
நம்புமடி யார்துணையே ஆடீரூஞ்சல்
ஞானபெருங் கடற்புணையே ஆடீரூஞ்சல்

வெம்பவம் தீர்க் கும்மருந்தே ஆடீரூஞ்சல்
வேண்டுவோர்க் கருள்விருந்தே ஆடீரூஞ்சல்
அம்புயமா மலர்வற்றாப் பளையில்மேவும்
ஆதிகண்ண கித்தாயே ஆடீரூஞ்சல். 11

## எமது வட பிராந்திய கிளைகள்

| | |
|---|---|
| முல்லைத்தீவு | 021 2290065, 021 2290066 |
| வவுனியா | 024 2222633, 024 2222634 |
| கிளிநொச்சி | 021 2285310, 021 2285311 |
| மன்னார் | 023 2223241, 023 2223242 |
| சாவகச்சேரி | 021 2270525, 021 2270526 |
| யாழ்ப்பாணம் | 021 2223047, 021 2228224 |
| மானிப்பாய் | 021 2255526, 021 2255527 |
| சங்கானை | 021 2250025, 021 2251060 |
| நெல்லியடி | 021 2262953, 021 2262954 |
| சுன்னாகம் | 021 2242901, 021 2242902 |

**மேலதிக கிளைகள், சேவைகள் தொடர்பான**
**விபரங்களைப் பெற**
**எமது துரித எண்ணை அழையுங்கள்**

**011 2008888**

**தலைமை அலுவலகம்**

செலான் டவர்ஸ் இல. 90, காலி வீதி, கொழும்பு - 03
தொலைபேசி : +94 11 2456789, +94 11 2456000
தொலைநகல் : +94 11 2456456
மின்னஞ்சல் : info@seylan.lk
வலை : www.seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating : 'A-(lka)'
கம்பனிப் பதிவிலக்கம் : PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு
செய்யப்பட்ட வர்த்தக வங்கி

**வற்றாப்பளை அம்மனின் சிறப்பு நாட்கள்**

- பங்குனித் திங்கள்
- வைகாசி விசாகப் பொங்கல்
- ஆடிப்பூரம்
- நவராத்திரி
- கார்த்திகைத் திங்கள்



Harikanan, Jaffna.